தேதி: 01.12.2013

ராஜ்நாத் சிங்

நாடாளுமன்ற உறுப்பினர்

மக்களவை

மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களுக்கு,

மணிப்பூர் மாநிலத்தை ஒட்டிய மியான்மரின் சர்வதேச எல்லை தொடர்பான சில உண்மைகளைத் தங்கள் பார்வைக்கு வைக்க நான் விரும்புகிறேன். பா.ஜ.க.வின் மணிப்பூர் மாநிலத் தலைவர் திரு. சௌபா சிங் அவர்களால் இந்த உண்மைகள் எனது கவனத்துக்கு வந்தன.

1. தென்-கிழக்கு ஆசியாவில் சுதந்திர அரசாட்சியாக மணிப்பூர் மாநிலம் இருந்தபோது, தென்கிழக்குப் பகுதியில் உள்ள மற்ற மாநிலங்களுடன் அது கலாசார ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. பண்டைய காலத்தில் இந்த அரசாட்சியின் வடக்கில் பிரம்மபுத்ரா நதியின் தெற்குப்புறத்தில் உள்ள கரையும், தெற்கில் லுசாய் மலையும், கிழக்கில் அப்போதைய பர்மாவின் இராவதி – சைண்ட்விந்த் நதிகள் சங்கமிக்கும் இடமும், மேற்கில் அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள காசேர் பள்ளத்தாக்கு மாவட்டங்களும் எல்லைகளாக அமைந்திருந்தன. (பிரிட்டீஷ் இந்தியாவின் கிழக்குப்புற எல்லைகள் பற்றிய அறிக்கை : கேப்டன் ஆர்.டி.பெம்பர்ட்டன்.1853).
2. இந்தப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி செய்த போது மணிப்பூர் மக்களின் சம்மதத்தைப் பெறாமல், முந்தைய பர்மா சமஸ்தானத்துடன் ஆங்கிலேயர் செய்துகொண்ட இருதரப்பு சர்வதேச உடன்படிக்கைகளின்படி, சுதந்திர மாநிலத்தின் எல்லைப்புறங்கள் தொடர்ந்து சுருங்கிக்கொண்டே வந்தன. 1826 பிப்ரவரி 24ஆம் தேதி அன்று யாண்டபோவில் கையெழுத்திடப்பட்ட அமைதி உடன்படிக்கை மற்றும் 1834 ஜனவரி 9ஆம் தேதி அன்று சன்னியாச்சி மலைத்தொடரில் போடப்பட்ட காபா பள்ளத்தாக்கு சம்மந்தமான ஒப்பந்தம் ஆகியவை காரணமாக கிழக்கு எல்லைப்புறம் தற்போதுள்ள நிலைக்குச் சுருங்கிவிட்டது. இந்த முறையில் அதே பாரம்பரிய சமுதாயத்தை சேர்ந்த நம்முடைய பெரும்பாலான கிராமங்களை ஒன்றில் இருந்து மற்றவைகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டது. (சோம்ரா நிலப்பகுதியில் உள்ள தங்கலில் இருந்து 12 கிராமங்களும், காங்பட்டில் இருந்து மற்ற ஐந்து கிராமங்களும் பர்மிய அரசாட்சியுடன் இணைந்தது). இன்று வரை, இந்த நிகழ்வுகளின் வருத்தம் காரணமாக, மணிப்பூர் மக்கள் மத்தியில்

அரசியல் உணர்ச்சி வேகங்கள் உருவாக்கப்படுகின்றன.

3. 1947 ஆகஸ்ட் 11ஆம் தேதி அன்று, இணைப்பு உடன்படிக்கையில் இந்தியாவின் முன்னாள் ஆங்கிலேய கவர்னல் ஜெனரலும், மணிப்பூர் மகாராஜாவும் ஒரு செயலற்ற கையெழுத்திட்டார்கள். 1950 அக்டோபர் 15ஆம் தேதி அன்று, மணிப்பூர் இணைப்பு ஒப்பந்தத்தில் மணிப்பூர் மகாராஜா கையெழுத்திட்டு, இந்திய ஆதிக்கத்திற்கு உட்பட்ட மாநிலமாக இணைத்துக்கொண்டார். மாநில எல்லைகளைப் பாதுகாப்பதும், கட்டுப்படுத்துவதும் இந்திய அரசின் சுயமாக நெறிமுறைப்படுத்தப்பட்டது. 1967 மார்ச் 10ஆம் தேதி அன்று இந்திய – பர்மிய எல்லைகள் தொடர்பாக இந்திய – பர்மிய அரசுகள் ஒரு இருதரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்றின. 1967 ஒப்பந்தத்தின்படி பாரம்பரிய எல்லைக்கோட்டின் அடிப்படையில் சர்வதேச எல்லைக்கோடு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், முறைப்படி எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு பிறகு, நாடுகளுக்கு இடையில் எல்லைகள் வரைப்படத்தில் மாற்றம் செய்யப்பட்டன. பின்பு, 1967 மே 30ஆம் தேதி அன்று புதுடில்லியில் இரண்டு நாடுகளும் ஒப்பந்தத்தைத் திருத்தி, ஒரு திருத்திமைக்கப்பட்ட ஒப்பந்தத்தைப் பறிமாறிக்கொண்டன.

4. 1975 ஏப்ரல் 5ஆம் தேதி அன்று, மாநிலத்தின் பொறுப்புமிக்க அதிகாரிகள் கலந்துகொள்ளாமல் நிலத்தளவில் உண்மையில் நிலவும் எல்லை நிர்ணயிக்கப்பட்டது. பாரம்பரிய எல்லைக்கோட்டை அடையாளப்படுத்தும் இடத்தில் அப்போதைய பர்மிய அரசின் அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்தினார்கள். அப்போது முதல் இந்தோ – பர்மிய எல்லைகள் பற்றிய சிக்கல் தொடர்ந்து வருகிறது. கிடைத்துள்ள ஆவணங்களின்படி, இந்திய பர்மிய எல்லையில் மணிப்பூர் பிரிவில் 98 எல்லைப்புறத் தூண்கள் (32 முதல் 130 வரை) அமைக்கப்பட்டுள்ளன. துய்வங்-மோல்சம் பகுதியில் 64 முதல் 68 வரையிலான எல்லைப்புறத் தூண்கள், தமு – மொரே பகுதியில் 75 முதல் 79 வரையிலான எல்லைப்புறத் தூண்கள், கொரோ-குனோ பகுதியில் 88 முதல் 95 வரையிலான எல்லைப்புறத் தூண்கள் என்று ஏராளமான எல்லைப்புறத் தூண்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. அனைத்தும் சேர்ந்து, இந்தோ-மியான்மர் பகுதியில் உள்ள இந்தோ-மியான்மர் எல்லையில் உள்ள மணிப்பூர் பிரிவில் 35 கிலோமீட்டர் நீளம், இதுவரை தீர்க்கப்படாமல் உள்ளன. அனைத்திற்கும் மேலாக, அந்தப் பகுதிகளில் உள்ள எல்லைப்புறத் தூண்கள் அகற்றப்பட்டும், காணாமல் போயும் உள்ளன. இந்திய-மியான்மர் எல்லைக்கோட்டைத் தக்கவைப்பதற்குத் தேவையான முயற்சிகளை மணிப்பூர் அரசு எடுத்திருந்தாலும், பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது.

5. இரண்டு மாறுபட்ட அளவுக்கோல்களுடன், இரண்டு மாறுபட்ட எல்லைக்கோடுகளைக் கொண்ட இந்திய – மியான்மர் எல்லைக்கோட்டை இந்திய கணக்கெடுப்பு ஆணையம் (SOI) அச்சிட்டுள்ளது. அவை, (அ) SOI டோபோ வரைப்படம் – 1973, (ஆ) SOI டோபோ வரைப்படம் – 1976.

பிரதேச எல்லைப்புறம், பிரதேச இறையாண்மை குறித்த பிரச்சினைகளில் மணிப்பூர் மக்கள் மிகவும் உணர்ச்சிகரமாக உள்ளார்கள். பர்மாவிடம் காபா பள்ளத்தாக்கை இழந்தது குறித்து அவர்கள் தொடர்ந்து அதிருப்தியில் இருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், தெரிந்த பாரம்பரிய எல்லையில் உள்ள பெரும் நிலப்பகுதியை மியான்மர் பக்கம் இழந்து முரண்பட்ட சர்வதேச எல்லைக்கோட்டின் தீர்க்கப்படாதப் பகுதியில் எல்லைப்புற வேலிகளை அமைத்திருப்பது, மக்களிடம் எச்சரிக்கையையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றன. அனைத்து உண்மைகளும் தெரிந்ததால், தற்போதைய எல்லைக்கு மாறாக மணிப்பூர் மக்கள் இயக்கம் நடத்துவது, எல்லையில் கடும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

எல்லைப்புற வேலி பிரச்சினை குறித்த மக்களின் உணர்ச்சிநிலையை கவனத்தில் கொண்டு, பா.ஜ.க.வின் மணிப்பூர் பிரிவு, 2013 அக்டோபர், 22ஆம் தேதி அன்று சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டு, அதை நாட்டின் பிற பகுதிகளில் எதிரொலிக்கிறது. பாதிக்கப்பட்ட கிராமங்களின் (தற்போதைய எல்லைப்புற வேலியால் பிரிக்கப்பட்ட கிராமங்கள்) உணர்ச்சியைப் புரிந்துகொண்டு, மணிப்பூர் பா.ஜ.க.வின் மக்கள் விஷயத்தை முழுவதுமாகவும் விரிவாகவும் விவாதித்து, மக்கள் மத்தியில் நிலவும் அவநம்பிக்கையான, அமைதியற்ற, அச்சம் நிறைந்த மனநிலையை மத்திய அரசால் மட்டுமே போக்க முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளது. மணிப்பூரின் மோரே பகுதியில் உள்ள வனவிலங்கு சரணாலயத்தில் 4 கீ.மி. உட்புறத்தில் தவறாகப் போடப்பட்டுள்ள எல்லைப்புற வேலியை அகற்றி, தற்போது நடைபெறும் வேலிகள் அமைக்கும் பணியையும் உடனடியாக நிறுத்தவேண்டும். எனவே, தேசிய நலன் குறித்த அக்கறையில் பா.ஜ.க. மத்திய அரசு இவற்றைச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு பா.ஜ.க. வந்துள்ளது.

1. பாரம்பரியமாக நம்மிடம் இருந்த பெரும் நிலப்பகுதியை மியான்மர் பக்கம் விட்டுவிடும் எல்லைப்புற வேலி அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்தவேண்டும். தற்போதைய வேலியானது, தீர்க்கப்படாத எல்லைப்புறக் கோடான, இந்தோ-மியான்மர் சர்வதேச எல்லைக்கோட்டின் மீது அமைந்துள்ளது. இந்த வகையில் வேலி அமைப்பது என்பது மியான்மரிடம் நம்முடைய நிலத்தின் பெரும் பகுதி சரணடைவது குறித்து அலட்சியமாக இருப்பதாக உள்ளது. யாங்கோபோப்பி-லோக்செள உயிரின சரணாலயமானது, (இந்திய – பர்மா பகுதியில் அமைந்துள்ள) உலகின் அதிமுக்கிய பல்லுயிர் வளாகம் என்பதும், தென்-கிழக்கு ஆசிய பாலூட்டி இனங்களின் இடமாகவும் திகழ்வதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இது போன்ற அரியதொரு சரணாலயத்தை மாற்றுவதற்கு அதைச் செயல்படுத்தும் நிறுவனம், சம்மந்தப்பட்ட அமைச்சரவையிடம் இருந்து தடையில்லா சான்றிதழ் பெற வேண்டும்.
2. பாரம்பரிய எல்லைப்பகுதியின்படி தீர்க்கப்படாத எல்லைக்கோட்டுப் பகுதியை மறுவரையறை செய்வதோ அல்லது இரண்டு நாட்டு மக்களின் பங்கேற்போடு மணிப்பூர் பகுதியோடு இணைந்த

எல்லைப்புறத் தூண்களை மறு-அடையாளப்படுத்துவதோ வெகு விரைவாக நடைபெற வேண்டும். மேலும், இந்திய கணக்கெடுப்பு ஆணையத்தால் அச்சிடப்பட்ட வரைபடங்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். தவறான வரைபடங்களை வெளியிடுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுமாறு கூகுள் தளத்திடம் கூற வேண்டும்.

3. ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லைக்கோட்டை மறுவரையறை செய்வது, எல்லைப்புறத் தூண்களை மறு-அடையாளப்படுத்துதல் ஆகியவற்றுக்குப் பிறகு, இரண்டு நாடுகளின் எல்லைக்கோடுகளிலும் 10 அடிகள் கைவிட்டு, 20 அடி தூரத்தை ஆளற்றப் பகுதியாக அறிவித்து, சர்வதேச மரபின் படி, வேலிகளை அமைக்க வேண்டும். அல்லது திரிபுரா பகுதியில் உள்ள இந்திய-வங்காளதேச எல்லைக்கோட்டில் செய்வ்த்தைப் போன்று சரியாக எல்லைக்கோட்டின் மீது வேலிகள் அமைக்கப்பட வேண்டும்.

4. (மத்திய, மாநில உள்துறை அமைச்சகங்கள் இணைந்த) குழுவை அமைத்து, மாநிலத்துடன் இணைந்து சர்வதேச எல்லைகளைப் பாதுகாத்து, மக்கள் நம்பிக்கையைப் பெறுவதற்கு எல்லைப்புறத் தூண்களின் இடம், எல்லைப்புற நீர்நிலைகள், நதிகள் ஆகியவற்றை சுலபமாகப் புரியும் பெயர்களிலும், மொழியிலும் மாற்றியமைத்து, விவரிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை மத்திய அரசு உடனடியாக பரிசீலனை செய்து, தேவையான நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக எடுக்கும் என்று நம்புகிறேன்

(ராஜ்நாத் சிங்)

பெறுநர்,

டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள்,

மாண்புமிகு பிரதமர்,

புதுடில்லி.